

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (5.11.2025) அண்ணா அறிவாலயத்தில், கழக துணைப் பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள சட்டமன்ற உறுப்பினர் முனைவர் க. பொன்முடி சந்தித்து, வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், விழுப்புரம் மத்திய மாவட்டப் பொறுப்பாளரும், சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் ஆர். லட்சுமணன், விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதம சிகாமணி மற்றும் விழுப்புரம் மாவட்டக் கழக நிருவாகிகள் உடனிருந்தனர்.




கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (5.11.2025) முகாம் அலுவலகத்தில், கழக துணைப் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் சந்தித்து, வாழ்த்துப் பெற்றார். உடன், கழகப் பொதுச் செயலாளரும், நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் உள்ளார்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (5.11.2025) முகாம் அலுவலகத்தில், வேலூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளராக புதிதாக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் சந்தித்து, வாழ்த்துப் பெற்றார். உடன், கழகப் பொதுச்செயலாளரும், நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சருமான துரைமுருகன், கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் உள்ளனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (5.11.2025) முகாம் அலுவலகத்தில், திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராக புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இல. பத்மநாபன் மற்றும் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி ஆகியோர் சந்தித்து, வாழ்த்துப் பெற்றனர். இந்நிகழ்வின்போது, நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், அமைச்சர்கள் மு.பெ. சாமிநாதன், அர. சக்கரபாணி, திருமதி. என். கயல்விழி செல்வராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (5.11.2025) தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில், வேலூரில் 32 கோடி ரூபாய் செலவில் 600 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள வேலூர் மினி டைடல் பூங்காவினை திறந்து வைத்து, வேலூர் மினி டைடல் பூங்காவினை முழுமையாக குத்தகைக்கு எடுத்துள்ள M/s. AGS Health care நிறுவனத்திற்கு தள ஒதுக்கீட்டு ஆணையை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் முனைவர் டி.ஆர். பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (5.11.2025) தலைமைச் செயலகத்தில், பொது மற்றும் மறுவாழ்வுத் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் எஸ்.எம்.நாசர், திருமதி. என். கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (5.11.2025) தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## கோத்தகிரி — செம்மனாரை

# ஆதிவாசி பள்ளிக் குழந்தைகள் - பொதுமக்களின் நலன் கருதி கூடுதல் பேருந்து வசதி!

## தமிழ்நாடு அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் துவக்கி வைத்தார்!

*நீலகிரி, நவ. 7 -*

நீலகிரி மாவட்டம் கோத்த கிரி வட்டம் செம் மனாரை ஆதிவாசி கிராம பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான கூடுதல் பேருந்து நீட்டிப்பு வசதி வேண்டி கடந்த 1.11.2025 அன்று குஞ்சப்பணை ஊராட்சி யில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் செம்ம னாரை கிராம மக்களின் சார்பாக அளிக்கப்பட்ட மனுவை ஏற்று முதல்வர் அவர்களின் ஆணைக்கி ணங்க, பொதுமக்கள் மற் றும் மாணவ, மாணவியர் நலன் கருதி புதிய மலைப் பகுதி வழித்தட பேருந்து நீட்டிப்பிற்காக தமிழ் நாடு அரசு தலைமை கொறடா கா.ராமச் சந்திரன் நேற்று முன் தினம் (5.11.2025) புதிய வழித்தட பேருந்து வச தியை கொடி அசைத்து துவக்கி வைத்தார்.

முன்னதாக தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக பொது மேலாளர் எம்.ஜி.ஜெய்சங்கர் அனை வரையும் வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளர் களாக நீலகிரி மாவட்ட அவை தலைவர் போஜன்,கோத்தகிரி ஒன் றிய செயலாளர் நெல்லை கண்ணன்,கீழ் கோத்தகிரி ஒன்றிய செயலாளர் பீமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் கிளை மேலாளர் (வணிகம்) ஞானப்பிரகாசம் மற்றும் தொ.மு.ச நீலகிரி மண் டல செயலாளர் நெடுஞ் செழியன், தொ.மு.ச. நீல கிரி மண்டல பொரு ளாளர் ஆனந்தன், கோத் தகிரி கிளை நிர்வாகிகள் சின்னான், ரத்தினகுமார், ஸ்டீபன், ஷியாம், சத்ய ராஜ் கணேசன், முன் னாள் கவுன்சிலர் சேகர் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்ட




னர்.

இறுதியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக வணிக மேலாளர் எஸ்.பாஸ்கர் நன்றியுரை கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ.பொ. அரசு
### நவம்பர் 7 (1987)



**தி.மு.க. சென்னை மாநகராட்சி மன்றத்தை கைப்பற்றியபோது தி.மு.க.வின் முதல் மேயராக பொறுப்பேற்று பணியாற்றியவர்.**

**20 ஆண்டுகாலம் மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் – 1967ஆம் ஆண்டு மாதவரம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார்.**

**1958ஆம் ஆண்டு நடைபெற்ற கருப்புக் கொடி போராட்டத்திலும், 1962ஆம் ஆண்டு விலைவாசி உயர்வை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்திலும் கலந்து கொண்டு சிறை சென்றார்.**

**பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருடன் நெருங்கிப் பழகியவர்.**

### தலைமைக் கழகம்
### தி.மு.க.